**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 256** **நாள்: 01.07.2026**

**பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் புதிய பள்ளிக் கட்டடங்கள், ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம், புதிய மருத்துவமனை, அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளிட்ட புதிய திட்டப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் சமுதாய நலக் கூடம், புதிய பள்ளிக் கட்டடம், கூடுதல் வகுப்பறைகள், புதிய நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு குடியிருப்புகள், புதிய பன்னோக்கு மருத்துவமனை/குழந்தைகள் மருத்துவமனை, இரத்த சுத்திகரிப்பு நிலையம், உணவு வளாகம், ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் அமைத்தல், விளையாட்டுத் திடல் மேம்பாடு, குளம் மேம்பாடு உள்ளிட்ட மக்களுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.07.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தண்டையார்பேட்டை மண்டலத்தில் முத்தமிழ் நகர், 8ஆவது தெருவில் மக்கள் பயன்பெறும் வகையில் புதிய சமுதாய நலக் கூடம் கட்டுதல், முல்லை நகர் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல், வடக்கு அவென்யூ சாலையில் நவீன உணவு வளாகம் அமைத்தல்,

சத்தியமூர்த்தி நகர் பகுதியில் மக்களின் நலவாழ்வினைப் பாதுகாக்கும் வகையில் புதிய பன்னோக்கு மருத்துவமனை/குழந்தைகள் மருத்துவமனை கட்டுதல், கணேசபுரம்-மேயர் கிருஷ்ணமூர்த்தி நகரில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் தொடர்பாகப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

கிருஷ்ணமூர்த்தி நகரில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளிக் கட்டடத்தின் உறுதித்தன்மையை அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் வல்லுநர்கள் மூலம் ஆய்வு செய்து, அதன்மேல் புதிய கட்டடம் கட்டுவதற்கான உறுதித்தன்மை குறித்து அறிக்கை பெற்று அதனடிப்படையில் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், இப்பள்ளியில் மாணவர்கள், ஆசிரியர்களின் வருகை குறித்தும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்தும், இப்பள்ளி அருகே அமைந்துள்ள

அம்மா உணவகத்தின் செயல்பாடு மற்றும் உணவின் தரம் குறித்து ஆய்வு செய்து, தரமான உணவினை வழங்கிட பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், இப்பகுதியில் உள்ள விளையாட்டுத் திடலில் இளைஞர்கள்/விளையாட்டு வீரர்கள் பயன்பெறும் வகையில் கூடுதல் விளையாட்டு வசதிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாகப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, வியாசர்பாடி, மூர்த்திங்கர் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவது தொடர்பாகவும், அப்பள்ளியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகைப் பதிவு குறித்தும் ஆய்வு செய்து, மாணவர்களுடன் கலந்துரையாடினார். பின்னர், இப்பகுதியில் மக்கள் பயன்பெறும் வகையில் புதிதாக இரத்த சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், வியாசர்பாடி, அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் உள்ள குளத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அதில் படர்ந்துள்ள ஆகாயத்தாமரைகளை முற்றிலும் அகற்றி, அக்குளத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, அருகே கால்பந்து மைதானம், கிரிக்கெட் வலைப் பயிற்சி, இறகுப் பந்து மைதானம், கைப்பந்து மைதானம் உள்ளிட்ட ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் கட்டும் பணிகள் மேற்கொள்ளுதல் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது, இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ..ப., மத்திய வட்டார ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.ராஜ்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**